# அருள் ஒளி



மாசி~ 2026 இதழ்: 176

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை.

உ
அம்பாள் துணை

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை (மாசி ~ 2026)

ஆசிரியர்
கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இலங்கை.

T.P: 021 321 3151, 021 224 1909
Email: thurkaiammantemple@mail.com
facebook: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISSN 978 - 955-23 - 0019 -3

## ஆலயம் தோறும் நந்தவனங்கள் அமைப்போம்

### ஆசிரியர் உரை


நந்தவனம் என்று எம் முன்னோர்கள் பூசைக்குகந்த மலர்களை கோயில் சூழலில் வளர்த்தார்கள். சரியைத் தொண்டுகளில் முதன்மையானது நந்தவனம் அமைத்து பாதுகாத்தல் என சேக்கிழார் சுவாமிகளின் திருத்தொண்டர் புராணம் எடுத்து இயம்புகிறது. இன்று கோயில்களில் நந்தவனத்தை பாதுகாப்பது மிகவும் அருகி வருகிறது. முன்பெல்லாம் சிறிய கோயிலாக இருந்தாலும் கோயிலுக்கு பெரிய பூங்காவனம் இருந்தது. சில அடியவர்கள் பூசைக்கு உகுந்த பூச்செடிகளை நட்டு, தண்ணீர் ஊற்றி, களை பிடுங்கி, காப்பாற்றி, தினமும் பூசை வேளைகளில் பூ கொடுத்தனர் மாலை கட்டிக் கொடுத்தனர். இந்த வழிபாட்டு மரபு சைவ சமயத்திலும் வைஸ்ணவ சமயத்திலும் ஏனைய இந்து மதத்தினுடைய வழிபாட்டு மரபிலும் முன்னுரிமை பெற்று இருந்தது. பூக்களை பூசைக்கு கொடுக்கின்ற அந்த பண்பாட்டில் நந்தவனம் முதன்மை பெற்றது. இன்று அந்த பண்பாடு தேய்ந்து கொண்டு இருக்கிறது கோயில் சுற்றாடலில் பூக்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. எதுவும் இன்று விற்பனை பொருளாகி விட்டது. கோயிலுக்கு வருகின்ற அடியவர்கள் பூக்களை இன்று விலைக்கு வாங்க வேண்டிய நிலையும் பூமாலைகளை விலைக்கு வாங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுவிட்டது.

பூமாலை கட்டுதல் என்பது ஒரு தொழிலாக செய்வதிலே தவறு இல்லை. ஆனால் கோயில் சுற்றாடலிலே பூ மரங்களை நாட்டி, பூக்களை பாதுகாத்தல் அவசியம் ஆகும். பூசைக்கு உகந்த பூக்கள் பூசைக்கு விலக்கப்பட்ட பூக்கள் என்று நூல்களிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. காரணம் பூசைக்கு உகந்த பூக்களை அடியவர்கள் பூசை முடிந்ததும் இறைவன் திருவடிபட்ட பூ என்று கண்ணிலே ஒத்தி காதிலே வைப்பார்கள். ஆனால் சில பூக்களில் நச்சுத்தன்மை வாய்ந்த பூக்களும் உண்டு. நச்சுத்தன்மை வாய்ந்த பூக்களை கண்ணிலே ஒத்தி செவியிலே வைப்பது கேடு விளைவிக்க கூடியது. உயிருக்கு ஆபத்தே உண்டாக்கக் கூடியது. எனவே தான் பூசைக்கு உகந்த பூக்கள், பூசைக்கு விலக்கப்பட்ட பூக்கள் என்ற பட்டியல் எம் முன்னோர்கள் பேணிப்பாதுகாத்தனர்.

அடர்ந்த காட்டுக்குள்ளே எத்தனையோ விதமான அழகான பூக்கள் இருக்கிறது. அந்த அழகான பூக்கள் ரசிக்க முடியுமே தவிர அந்த பூக்களை வீட்டிலே நாட்டுவதில்லை. கோயிலிலே நட்டு வளர்ப்பதில்லை. காரணம் அந்த பூக்களிலே அல்லது அந்த பூக்கள் தங்கியிருக்கின்ற மரத்தில் உள்ள தண்டுகளிளே அல்லது இலைகளிலே பொல்லாத வி'ம் முள்ளுகள் உண்டு. அல்லது அந்த இலைகளில் நச்சுத்தன்மை உண்டு.

12 ராசிக்கும் 12 ராசிக்கான மரங்களை கோயில்களிலே நட்டு பாதுகாத்த முறை ஒன்று இருந்தது. ஒவ்வொரு ராசிக்காரரும் தங்களுடைய தோ' நிவாரணமாக தோச நிவர்த்திக்காக அந்தந்த மரங்களை சுற்றி வழிபாடு செய்கிற மரபு இருந்துள்ளது. இந்தியாவிலே பெருங்கோவில்களிலே இருக்கின்ற நந்தவனத்தில் ராசிகளுக்குரிய மரங்கள் நாட்டப்பட்டுள்ளது. 27 நட்சத்திரங்களுக்கும் மரங்கள் உண்டு. அந்த மரங்கள் அந்த நட்சத்திரம் சார்ந்தவர்கள் கோயிலிலே கொண்டுவந்து அந்த நட்சத்திர மரங்களை நேர்த்தியாக கொடுத்து அது கோயிலுக்கு பயன்பாடாக அமைய வேண்டும் என்று சொல்லுகின்ற முறை இருந்தது.

பூக்களுக்கு தலையாய பூ தாமரைப்பூ அதனால் தான் தாமரை எல்லா கடவுளுக்கும் விசேடமாகும். நந்தவணங்களிலே அந்த காலத்திலே நீர்த்தடாகம் அமைத்து தாமரை, அல்லி, நீலோம்பலம் போன்றவற்றை வளர்ப்பார்கள். ஏனென்றால் அதை இறைவனுடைய கரங்களிளே கொடுத்து ஆசி பெறுவதற்காக. இன்று தாமரைக் குளங்கள் பெரும்பாலும் கோவில் சுற்றாடலிருந்து அருகி விட்டது. அதே நேரத்திலே நீலோற்பவ பூக்களை நீர் தடாகங்களை கட்டி வைத்து பராமரிப்பதும் அழிந்துவிட்டது.



எனவே கோயில்களினுடைய சுற்றாடலிலே பூக்கள் நந்தவனங்கள் மட்டுமல்ல திருக்குளங்களை அமைத்து அந்த திருக்குளங்களிலே பூசைக்கு தண்ணீரிலே உற்பத்தியாகின்ற மலர்களை பேணிப் பாதுகாக்கின்ற தடாகக் கட்டமைப்பு எல்லாம் ஒரு காலத்தில் இருந்தது. தீர்த்தமாடுவதற்கு ஒரு தீர்த்ததடாகமும் பூசைக்கு உகந்த தாமரை போன்ற மலர்களை வளர்ப்பதற்கு ஒரு தடாகமும் கோயில்களிலே இருக்கும். இது பற்றி புராணங்களில் அழகாக எடுத்துதுரைக்கபட்டுள்ளது.

எனவே இன்று கோயில்கள் பல்வேறு விதமாக கட்டிட நிர்மானம் செய்யப்படும் வேளையில் கோயில் சுற்றாடலிலே பூத்து பூசைக்கு உதவுகின்ற பூக்களை உடைய நந்தவனங்களும், இறைவனுக்கு உகந்த தாமரை பூக்கள் போன்றவை விளைகின்ற தடாகங்களும் உருவாக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அது இந்த தலைமுறையின் கடமை என்பதை நாம் உணர வேண்டும்.

**பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை**
**ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்**
**கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது**
**நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே**

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
**ஆசிரியர் ~ அருள்ஒளி**

# பக்தி பூர்வமாக நடைபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் இராஜகோபுர கும்பாபிஷேகம்



யாழ்ப்பாணம், மானிப்பாயில் வரலாற்றுப் புகழ்பெற்ற மருதடி விநாயகர் ஆலயத்தின் இராஜகோபுர மகா கும்பாபிேகம் கடந்த 08.02.2026 அன்று பக்திப் பெருக்குடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்த இந்த இராஜகோபுரம், சிற்பக் கலை நுணுக்கங்களுடன் கம்பீரமாக அமையப்பெற்று, அன்று காலை சுப முகூர்த்த வேளையில் புனித நீரூற்றப்பட்டு கும்பாபிேகம் செய்து வைக்கப்பட்டது. இந்த ஆன்மீக நிகழ்வில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு விநாயகப் பெருமானின் அருளாசியைப் பெற்றனர்.

இந்த மகத்தான திருப்பணியின் ஒரு பகுதியாக, மருதடி விநாயகர் ஆலயத்தின் இராஜகோபுரத்தை மிக நேர்த்தியாகவும், கலைநயம் மிக்கதாகவும் வடிவமைத்து நிர்மாணித்த தென்னிந்தியக் கலைஞர் க.புருசோத்தமன் அவர்கள் ஆலய நிர்வாகத்தினரால் இதன்போது கௌரவிக்கப்பட்டார். சிற்பக் கலையில் அவர் காட்டிய அர்ப்பணிப்பு மற்றும் திறமையைப் பாராட்டி, அவருக்கு கௌரவம் அளிக்கப்பட்டது.





# ஆன்மீகப்பெருக்குடன் நடைபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகம்




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வரலாற்றுப் பெருமைமிக்க அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் அருள்மிகு ஸ்ரீ சிவஞான வைரவ சுவாமி திருக்கோயிலின் புனராவர்த்தன அ்‘டபந்தன பிரதி‘டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா, 2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ஆம் திகதி பக்திபூர்வமாகவும் மிக விமர்சையாகவும் நடைபெற்றது. கல்விப்புலமும் ஆன்மீகமும் கைகோர்க்கும் ஒரு புனிதமான நிகழ்வாக அமைந்த இத்திருவிழா, பாடசாலைச் சமூகத்தின் ஒருமைப்பாட்டையும் இறைபக்தியையும் உலகிற்கு பறைசாற்றியது. பல சிவாச்சாரியார்கள் மந்திரங்கள் முழங்க, வேத பாராயணங்களுடன் கிரியைகளை முன்னின்று நடத்த, தெய்வீக ஆற்றல் நிறைந்த ஒரு சூழலில் வைரவப் பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிட்டியது.

இந்த மஹா கும்பாபிஷேக நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தற்போதைய மாணவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் கலந்து கொண்டனர். அவர்களுக்கு நிகராக, உலகின் பல பாகங்களில் இருந்தும் வருகை தந்த பழைய மாணவர்கள் தங்களது தாய் நிறுவனத்தின்

ஆன்மீக எழுச்சியில் பங்கெடுத்துக்கொண்டமை நெகிழ்ச்சியான காட்சியாக அமைந்தது. வைரவப் பெருமானின் மெய்யடியார்கள் திரளாகத் திரண்டு வந்து, ”அரோகரா” கோ‘ங்களுடன் ஆலய முன்றலில் பக்திப் பெருக்கோடு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.





பாடசாலைத் தளத்தில் அமைந்துள்ள இத்திருக்கோயில் மாணவர்களின் ஒழுக்கத்திற்கும், மன வலிமைக்கும் ஆதாரமாக விளங்குவதோடு, இந்த கும்பாபி‘ேக நிகழ்வு அத்தொடர்பினை மேலும் வலுப்படுத்தியுள்ளது. பல தசாப்த கால பாரம்பரியத்தைக் கொண்ட இவ்வாலயத்தின் கும்பாபி‘ேகம், புதிய பொலிவுடன் மென்மேலும் சிறப்படைய வழிவகுத்துள்ளது.

ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் என முத்தலைமுறையினரும் இணைந்து ஒருமித்த கருத்துடன் ஆற்றிய தொண்டுகள், வைரவப் பெருமானின் பேரருளால் இனிதே நிறைவடைந்தன. ஆன்மீக அதிர்வுகளும், பக்தி மணமும் நிறைந்த இந்நாள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் ஒரு பொற்காலப் பதிவாக என்றும் நிலைத்திருக்கும்.





# கரும்பைத் தின்ற கல்யானை



மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஒவ்வொரு பொங்கல் அன்றும் கல் யானைக்கு கரும்பு தந்த லீலை ஒரு விழாவாக நடத்தப்பட்டு வருகிறது.

மதுரையை தலைநகராகக் கொண்டு அபிஷேக பாண்டியன் ஆட்சி செய்து கொண்டிருந்த காலகட்டம் அது.

ஒரு பொங்கல் திருநாள் அன்று அமைச்சர்கள், படைவீரர்கள் புடைசூழ மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வந்தான் அபிஷேகப் பாண்டியன். கோவிலுக்கு மன்னர் வருவதைக் கண்ட பக்தர்கள் அனைவரும் அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கினர் ஒருவரைத் தவிர. அதைக் கண்டு மன்னனுக்கு கொஞ்சம் கோபம் வரத்தான் செய்தது.

அதற்குள் பணியாள் ஒருவன், மன்னா! இவர் ஒரு சித்தர். சித்து வேலைகள் பலவற்றை நிகழ்த்தி இருக்கிறாராம் என்றான்.

தன்னை அலட்சியப்படுத்தியவர் ஒரு சித்தர் என்று அறிந்ததும், அவர் அருகில் சென்று வணக்கம் தெரிவித்தான் மன்னன். ஆனால் சித்தர் என்று அடையாளம் காட்டப்பட்டவரிடம் இருந்து மன்னனுக்கு பதில் மரியாதை கிடைக்கவில்லை. இருப்பினும் மன்னனே அந்த சித்தரிடம் பேசினான். தாங்கள் அற்புதங்கள் நிகழ்த்துவதாக கேள்விப்பட்டு இருக்கிறேன். முதியவரை இளைஞராகவும், இளைஞரை முதியவராகவும், பெண்ணை ஆணாகவும், ஆணைப் பெண்ணாகவும் மாற்றுகிறீர்களாமே.. ஊமையை பேச வைக்கிறீர்கள், குருடர்களை பார்க்க வைக்கிறீர்கள் என்றும் கேள்விப்பட்டேன்! அது உண்மைதானா? என்று கேட்டான்.

எல்லாம் உண்மையே! எனக்கு எல்லாக் கலைகளும் தெரியும் என்றார் அந்த சித்தர்.

இருந்தாலும், மன்னனுக்கு அந்த சித்தரின் அற்புதங்கள் மீது நம்பிக்கை வரவில்லை. அவரை சோதிக்க நினைத்தான்.

சரி சித்தரே! உங்கள் அற்புதத்தை நேரில் பார்க்க ஆசைப்படுகிறேன். உங்களால் இப்போது அதை செய்து காண்பிக்க முடியுமா? என்றான்.

மன்னன், தன்னையே சோதிக்க நினைப்பதை எண்ணி அவருக்கு கோபம் வந்தது. என்ன... என்னையே சோதிக்கிறாயா? என்றார்.

ஆமாம்.. அதில் என்ன தவறு இருக்கிறது? நான் உங்கள் அற்புதத்தை நேரில் பார்த்தால் தானே உண்மையை உணர முடியும் என்ற மன்னனிடம் இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? என்றார் அந்த சித்தர்.

இந்த கல்லால் ஆன யானை சிலை, கரும்பை உண்ணும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நீங்கள் கேட்டதை எல்லாம் தருகிறேன் என்று, அருகில் இருந்த யானை சிலையை காண்பித்தான். தன் கையில் ஒரு கரும்பையும் எடுத்துக்கொண்டான்.

சித்தர், அந்த யானைச் சிலையை கூர்ந்துப் பார்த்தார். அடுத்த நொடியே அந்த கல் யானை உயிர் பெற்று முன்னோக்கி நடந்து வர ஆரம்பித்தது. அதைப் பார்த்த எல்லோரும் திகைத்துப் போய் நின்றனர். அரசன் அருகில் வந்த அந்த யானை, அவன் கையில் இருந்த கரும்பை வாங்கித் தின்றது.

இன்னொரு முறை அந்த யானையை பார்த்தார் சித்தர். உடனே அது, அரசன் கழுத்தில் கிடந்த மாலையை தனது துதிக்கையால் பறித்தது. அரசன் திடுக்கிட்டுப் போனான். மன்னனின் படைவீரர்கள் சிலர் கோபத்தில் சித்தர் மீது பாய வர, அவர்களை நோக்கி கை காண்பித்தார் அவர். அடுத்த நொடியே அவர்கள் அனைவரும் சிலை ஆனார்கள்.

அதன்பிறகு தான், அந்த சித்தர் மாபெரும் மகான் என்று உணர்ந்து கொண்டான் மன்னன். தன்னை மன்னிக்குமாறு அவரது காலில் விழுந்து வேண்டினான்.

அவனை மன்னித்த சித்தர், உனக்கு என்ன வேண்டுமோ கேள்? என்றார்.

மன்னனும், தனக்கு குழந்தை பாக்கியம் இல்லாத குறையைக் கூறி, மழலைச் செல்வத்தைக் கேட்டான். சித்தர், அப்படியே ஆகட்டும்! என்று அருள்பாலித்தார். அக்கணமே சித்தர் மாயமானார். உயிர்ப்பெற்று வந்த கல் யானை மீண்டும் கற்சிலையாக மாறியது. சிலையாக மாறிய வீரர்கள் உயிர்ப்பெற்றனர்.

அதன் பின்னர் தான், சித்தர் வடிவில் வந்தது சொக்கநாதர் என்பதை உணர்ந்தான், மன்னன். அடுத்த ஒரு வருடத்தில் சொக்கநாதர் அருளியபடியே, அபிஷேக பாண்டியனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் தான் விக்கிரம பாண்டியன்.

இந்த நிகழ்வை கொண்டாடும் வகையில், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஒவ்வொரு பொங்கல் அன்றும் கல் யானைக்கு கரும்பு தந்த லீலை ஒரு விழாவாக நடத்தப்பட்டு வருகிறது. மேலும், அந்த அற்புதத்தின் படி கரும்பு தின்றதாக கூறப்படும் கல் யானையை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில், சுவாமி சன்னிதிக்கு இடப்புறத்தில் இன்றும் நாம் பார்க்கலாம்.

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலய மாணவர்களுக்கான ஸ்மார்ட் வகுப்பறை கற்றல் தொடக்கவிழா



வலிகாமம் கல்விவலயத்தின் ஆரம்க்கல்விப்பாடசாலைகளில் செயற்றிறன் மிக்கதொரு பாடசாலையாக மல்லாகத்தில் அமைந்துள்ள கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் விளங்கிவருகிறது. இப்பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு மிகவும் தேவையான திறன்பலகை ஒன்றை அனைத்துலக மருத்துவ நல அமைப்பு வழங்கியதுடன் ஆசிரியர்களுக்கான பயிற்சியையும் ஒழுங்கு படுத்தியது. கடந்த 19-12-2025 காலை திறன்பலகை கற்றல் நிகழ்வு சம்பிரதாய முறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது, நிகழ்வில் பாடசாலை அதிபர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன், இணைப்பாளர் துஷாந்தன் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் பங்குபற்றி சிறப்பித்தனர், கலாநிதி ஆறுதிருமுருகன் தனது ஆசியுரையில் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு IMHO (USA) மற்றும் Ratnam Foundation ஆகிய நலநோன்பு நிறுவனங்களின் அளப்பரிய சேவையினை பாராட்டினார், சிறப்பாக இப்பாடசாலைக்கு திறன் பலகையை வழங்கியுள்ள Dr. ஈஸ்வரன் வேலாயுதபிள்ளை அவர்களின் கொடைக்கு நன்றியும் கூறினார், தொடர்ந்து அதிபரின் உரையுடன் ஆசிரியர்கள் மாணவர்களுடன் கற்றல்கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டனர், மாணவர்களின் உற்சாகமான கற்றல் இத்திறன் வகுப்பறையின் நோக்கத்தை நிறைவு செய்வதாக அமைந்தது. அனைத்துலக மருத்துவ நல அமைப்பு பிரதிநிதியின் கற்றல் செயற்பாடுபற்றிய விபரமான ஆலோசனையுடன் விழா நிறைவுற்றது.







# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 292ஆவது ஆண்டு நெற்புதிர் அறுவடை விழா பக்திப்பூர்வமாக நடைபெற்றது




யாழ்ப்பாணம், நல்லூர் மண்ணின் வரலாற்றுச் சிறப்புமிக்க மரபுகளில் ஒன்றான நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் நெற்புதிர் அறுவடை நிகழ்வு, 31.01.2025 காலை பழைமை மாறாத பண்பாட்டு விழுமியங்களுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பேணப்பட்டு வரும் இந்தத் தொன்மையான பாரம்பரியம், இவ்வருடம் தனது 292ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்கின்றமை ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

தைப்பூசத் திருநாளுக்கு முதல் நாளை புதிர் தினம் எனக் கொண்டாடுவது நல்லூர் ஆலயத்தின் நீண்டகால மரபாகும். அந்த வகையில், அன்றைய தினம் அதிகாலை வேளையில் ஆலயத்தின் அறங்காவலரும், சிவாச்சாரியார்களும் இணைந்து முதலாவது நெற்கதிரை அறுவடை செய்வதற்காகப் புறப்பட்டனர். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான, செம்மணி பகுதியில் அமைந்துள்ள வயல் நிலத்தில் இதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

செம்மணி வயல் நிலத்தைச் சென்றடைந்ததும், அங்குள்ள நிலத்திற்கு விசேட பூசை வழிபாடுகள் மற்றும் கிரியைகள் முறைப்படி நடத்தப்பட்டன. நிலத்திற்கு நன்றி செலுத்தும் விதமாக இடம்பெற்ற இந்தப் பூசைகளைத் தொடர்ந்து, மங்கல வாத்தியங்கள் முழங்க ஆலய அறங்காவலர் மற்றும் சிவாச்சாரியார்கள் இணைந்து முதலாவது நெற்புதிரை மங்கலமாக அறுவடை செய்தனர்.




அறுவடை செய்யப்பட்ட அந்தப் புதிய நெல், புனிதமாகக் கொண்டு வரப்பட்டு அதிலிருந்து அமுது (புதிர்ச் சோறு) தயாரிக்கப்பட்டது. இவ்வாறு முறைப்படி சமைக்கப்பட்ட அமுது, நல்லூர் கந்தசுவாமிக்கு விசேட படையலாக வைக்கப்பட்டு, சிறப்புப் பூசைகள் மற்றும் ஆராதனைகள் இடம்பெற்றன. இறைவனுக்குப் படைக்கப்பட்ட பின்னர், இப்பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் விவசாயப் பண்பாட்டையும், ஆன்மீகத்தையும் ஒருசேரப் பிரதிபலிக்கும் இந்த விழா, 292 ஆண்டுகளாகத் தொய்வின்றித் தொடர்ந்து வருவது அதன் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. நிலத்தோடு இணைந்த வாழ்வியலையும், உழைப்பின் பலனை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் நன்றியுணர்வையும் பறைசாற்றும் இந்த நெற்புதிர் விழா, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தனித்துவமான கலாசார அடையாளமாக இன்றும் போற்றிக் காக்கப்பட்டு வருகின்றது.






# குழந்தைகளுக்கு ஏடு தொடக்கும் வைபவம் தைப்பூச நன்னாளில் இடம்பெற்றது

மங்கலம் பொங்கும் தைப்பூச நன்னாளான (01.02.2025) தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் குழந்தைகளின் கல்விப் பயணத்தை ஆரம்பித்து வைக்கும் ஏடு தொடக்கும் மங்களகரமான நிகழ்வு மிகவும் பக்திப்பூர்வமாக நடைபெற்றது. சகல செல்வங்களையும் குறைவின்றி நல்கும் எல்லாம் வல்ல ஈஸ்வரியான தெல்லிப்பழை துர்க்கை அம்மன் எழுந்தருளியிருக்கும் இத்திருத்தலத்தில், ஏராளமான பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை அழைத்து வந்து இந்த நற்கருமத்தில் பங்கேற்றனர். இந்நிகழ்வில், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிர்வாக சபைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்கள் கலந்துகொண்டு, தனது திருக்கரங்களால் சிறுவர்களுக்கு ஏடு தொடக்கி வைத்து அவர்களது கல்வி வாழ்வைச் சிறப்போடு ஆரம்பித்து வைத்தார்கள். ”தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும்” எனத் தொடங்கும் அபிராமிப் பட்டரின் சத்திய வாக்கிற்கிணங்க, அன்னையின் கடைக்கண் பார்வை பட்டால் கல்வியும், செல்வமும், சோர்வில்லாத மனமும், நற்குணங்களும் வாய்க்கும் என்ற நம்பிக்கையில் இப்பாரம்பரிய நிகழ்வு இனிதே நிறைவேறியது.

அன்னையின் திருமுன்பு ஆன்றோர் பெருமக்களின் ஆசியுடன் கல்வியைத் தொடங்குவது சிறப்பானது என்பதை உணர்ந்த பெற்றோர்கள், திரளாக வருகை தந்து தமது பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்க வேண்டி நின்றனர். விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் அன்னையின் அருட்பிரசாதங்கள் வழங்கப்பட்டன.






# அறநெறிக் கல்வியால் நல்வழிப்படும் இளைய சமூகத்திற்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் உதவிகள்



தைப்பூச நன்னாளினை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் வலி வடக்கு பகுதியில் சிறப்பாக இயங்கி வருகின்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. தனிமனித வாழ்வில் நேர்மையான வழிகாட்டியாகத் திகழும் அறநெறிக் கல்விக்கு ஒவ்வொருவரும் அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை உணர்த்தும் நோக்கில் இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இதன் ஒரு கட்டமாக, பதினைந்திற்கும் மேற்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களிடம் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களைக் கையளித்தார். இளைய சமூகத்தினர் மத்தியில் இறை சிந்தனையை வளர்ப்பதுடன், தேவார திருப்பதிகங்கள் ஓதுதல், அற நூல்களை வாசித்தல் மற்றும் தெய்வீகக் கலைகளைப் பயிலுதல் போன்ற நற்பழக்கங்களைச் சிறுவயது முதலே ஊட்டுவது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும். தற்கால இளைய



சமூகம் பல்வேறு வழிகளில் சீரழிந்து வருவதாகச் சமூகப் பெரியோர்கள் கவலை தெரிவிக்கும் இவ்வேளையில், அவர்களை நல்வழிப்படுத்த ஆன்மீகமும் அறநெறிக் கல்வியுமே மிகச்சிறந்த தெரிவுகளாக அமைகின்றன. வாரத்தின் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தவறாமல் மாணவர்களை அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதன் மூலம், அவர்களது மனதில் தர்ம சிந்தனைகளையும் நேரிய ஒழுக்கங்களையும் ஆழமாகப் பதிக்க முடியும்.



அறநெறிக் கல்வியை ஊக்கப்படுத்தி எமது இளைய சமூகத்தைச் சீரிய பாதையில் இட்டுச் செல்லத் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் எப்போதும் தயாராக உள்ளது. சிறப்பாக இயங்கி வரும் அறநெறிப் பாடசாலைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கத் தேவஸ்தானம் என்றும் பின்னிற்காது என்பதால், பாடசாலை நிர்வாகத்தினர் தேவஸ்தானத்தைத் தொடர்புகொண்டு உரிய உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆன்மீகப் பற்றுள்ள, பண்புள்ள சமுதாயத்தை உருவாக்குவதே இத்தகைய பணிகளின் மேலான நோக்கமாகும்.

# கீரிமலை நகுலேஸ்வரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமான மகாசிவராத்திரி மகோற்சவம்



வரலாற்றுப் புகழ்பெற்ற கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரப் பெருமானின் மகாசிவராத்திரி விரதத்தை முன்னிட்ட வருடாந்த மகோற்சவம், நேற்று (02.02.2025) பக்தி பூர்வமான கொடியேற்றத்துடன் மிகச் சிறப்பாக ஆரம்பமானது. வானிலுள்ள இருளைப் போக்கும் வெண்மதியைச் சடையில் தாங்கி, எல்லாம் வல்ல ஈஸ்வரியைத் தனது திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டு வீற்றிருந்தருளும் சிவபெருமானைச் சரணடைந்து வாழ்பவர்களுக்கு, பிறவித் துயர் ஒருபோதும் வந்து சேராது என்பது ஆன்றோர் வாக்காகும்.



புகழ்பூத்த நகுலேஸ்வரத்தில் வீற்றிருந்தருளும் அண்ணலாகிய சிவபெருமான், திருவெண்ணீறு பூசிய திருமேனியுடையவர். ஒப்பற்ற அப்பெருமானின் திருவடிகளைப் போற்றுபவர்கள், சிந்தை முதலிய பசுகரணங்கள் நீங்கி, பதிகரணங்களாக மாறியவர்களாய் முத்தியின்பம் பெறுவதற்குரிய சிவஞானம் கைகூடப் பெற்றவர்களாவர். மூன்று கண்களையுடைய மூர்த்தியான சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற நகுலேஸ்வரப் பெருமானைக் கைதொழ எண்ணும் அன்பர்கட்குத் தீமை எதுவும் அணுகாது என்பது திண்ணம்.



திருமூலர் பெருமான் அருளியது போல, நம் ஊனில் ஆவி துடிக்கும் பொழுதெல்லாம் நாதனை நினைந்து போற்றுபவர்களை, அம்பலவாணன் வான் நிலாவிய சிவலோகத்தில் இருக்க வைப்பார். அத்தகைய பெரும் பேற்றினை அருளும் நகுலேஸ்வரப் பெருமானின் மகோற்சவக் காலங்களில், அடியார்கள் தினந்தோறும் வருகை தந்து பெருமானின் திருவடிகளைப் போற்றி வணங்கி, அருளைப் பெற்றுச் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர்.

# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னசத்திரம் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்




ஈழத்தின் வரலாற்றுப் புகழ்பெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பல தனிச்சிறப்புகளில் அடியார்களுக்கு அமுது செய்வித்தல் என்பது மிக முக்கியமான அறப்பணியாகும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் போற்றிப் பரவிய புண்ணியம் நிறைந்த இத்தொண்டினைத் தொன்றுதொட்டு முன்னெடுத்து வரும் எமது தேவஸ்தானம், அடியார்கள் மேலும் வசதியாகப் பசியாறிச் செல்வதற்கேற்ப அன்னசத்திரத்தினை மீளப்புனரமைக்கும் பணிகளைச் சிறப்புமிக்க தைப்பூச நன்னாளில் சுப வேளையில் ஆரம்பித்துள்ளது. தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயாவினால் அடிக்கல் நாட்டும் வைபவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மண்ணில் பிறந்த பயன் என்பது பிறை சூடிய பெருமானின் அடியார்களுக்கு அமுது செய்விப்பதே என்பதைச் சேக்கிழார் பெருமானின் வரிகள் எமக்கு உணர்த்துகின்றன. அடியார்கள் பசியின்றி வாழ்வதே இறைவனுக்குச் செய்யும் மேலான தொண்டு என்பதைச் சமயப் புராணங்கள் வலியுறுத்துகின்றன.
இதனை மெய்ப்பிக்கும் வகையிலேயே, மயிலாப்பூரில் இறந்த பூம்பாவையை உயிர்ப்பிக்க முற்பட்ட திருஞானசம்பந்தப் பெருமான், "சிவனடியார்க்கு அமுது செய்விப்பதும், சிவ விழாக்கள் கொண்டாடுவதுமே உண்மையான சிவத்தொண்டு" என்ற சத்திய மொழியைக் கூறி அவளை மீளப் பெற்றார்.




அமர்நீதி நாயனார், காரைக்கால் அம்மையார் போன்றோர் இத்தொண்டின் மூலமே முக்தி நிலையை அடைந்தனர். அதேபோல், திருமங்கை ஆழ்வாரும் அடியார்களின் பசி தீர்ப்பதன் அவசியத்தை அறிவுறுத்தியுள்ளார். "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்ற பாடலின் வழி, அமுது செய்விப்பவர்கள் இறைவனின் பேரருளை மிக எளிதாகப் பெற்றுவிடுகிறார்கள் என்பது திண்ணம்.

அடியார்களின் பசி நீங்குவதால் ஒருவரின் அல்லல்கள் நீங்கி மனமகிழ்ச்சியும் இறை அருளும் கைகூடும் என்பது சத்திய வாக்காகும்.



இறைவனை அடையும் வழி என்பது அடியவர்களைப் போற்றி உணவளிப்பதே என்ற உயர்ந்த சிந்தனையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் எமது தேவஸ்தானத்தில், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் புனரமைப்புப் பணிகள் அம்பாளின் திருவருளால் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்படும். இப்புனரமைப்புப் பணிகள் நடைபெறுகின்ற அதேவேளையில், தேவஸ்தானத்தில் வாரந்தோறும் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அடியார்களுக்கு வழங்கப்பட்டு வரும் அன்னதானப் பணிகள் எவ்வித தடையுமின்றி வழமை போல் தொடரும் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னை துர்க்கையின் திருவருளோடு அமையவுள்ள இந்த நவீன வசதிகளுடன் கூடிய அன்னசத்திரம், வரும் காலத்தில் அடியார்களுக்குச் சிறந்த முறையில் தொண்டாற்ற வழிவகுக்கும்.

அடையா வாயிலாக செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக் கிழமைகளில் பக்தர்களுக்கு வாயிறார உணவளிக்கும் உன்னத இடம் புனரமைப்பு காண்கிறது. இந்த புண்ணிய காரியத்தில் அனைவரும் பங்கெடுப்போம்.






# ஈழத்துத் திருத்தலங்களில் பக்திப் பெருக்குடன் நடைபெற்ற தைப்பூசத் திருவிழா




சைவ மக்களின் முக்கிய விரத தினங்களில் ஒன்றான தைப்பூசத் திருநாளை முன்னிட்டு, ஈழத்தின் பல பாகங்களிலும் உள்ள முருகப்பெருமான் ஆலயங்களில் விசேட வழிபாடுகளும் திருவிழாக்களும் பக்திப் பெருக்குடன் நடைபெற்றன. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில் மற்றும் யாழ்ப்பாணத்தின் வரலாற்றுப் புகழ்பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் உள்ளிட்ட ஈழத்தின் முக்கிய ஆலயங்கள் அனைத்திலும் விசேட அபிஷேகங்களும் பூஜைகளும் இடம்பெற்றன.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இந்த நன்னாளில் ஆலயங்களுக்குத் திரண்டு வந்து, மனதார முருகப்பெருமானை வணங்கித் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி இறை அருளைப் பெற்றுக்கொண்டனர். பல ஆலயங்களில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராகத்






திருமஞ்சத்தில் எழுந்தருளி அடியார்களுக்குக் காட்சி அளித்தமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.
இவ்விழாக்களின் ஒரு சிறப்பம்சமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவையம்பதி கந்தசுவாமி கோவிலில் "உலகப் பெருமஞ்சம்" என்று போற்றப்படும் பிரம்மாண்டமான மஞ்சம் மிகச் சிறப்பாக மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுத் திருவீதி உலா நடைபெற்றது. முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக அந்தப் பெருமஞ்சத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்க, ஆயிரக்கணக்கான பக்தர்கள் "அரோகரா" கோஷங்கள் முழங்க மஞ்சத்தினை இழுத்துச் சென்ற காட்சி பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது.
இது தவிர ஏனைய பிரதான முருகன் ஆலயங்களிலும், கிராமியத் திருத்தலங்களிலும் தைப்பூசத்தை முன்னிட்டு அன்னதானங்கள் வழங்கப்பட்டதுடன், திருமுறைப் பாராயணங்கள் மற்றும் ஆன்மீகச் சொற்பொழிவுகளும் இடம்பெற்று நாடெங்கும் இறை அருள் ஒளி பரவிய தினமாக இத்தைப்பூசத் திருநாள் அமைந்தது.







# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் ஆரம்பமான பால்குட பவனி



தைப்பூசத் திருநாளை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திலிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் நோக்கிப் பல பக்தர்கள் பங்கேற்ற பால்குட பவனி 01.02.2026 மிகவும் பக்திப் பூர்வமாக நடைபெற்றது. அன்னை துர்க்காதேவியின் அருளாசியுடன் ஆரம்பமான இந்தப் பால்குடப் பவனியில், வலி வடக்கு மற்றும் அதனைச் சூழவுள்ள பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்த பெருமளவிலான பக்தர்கள் கலந்துகொண்டனர். முருகப் பெருமானுக்குரிய அரோகரா கோ'ங்கள் விண்ணதிர, பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் பொருட்டுப் பால்குடங்களை ஏந்தியவாறு பாதயாத்திரையாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைச் சென்றடைந்தனர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலை அடைந்த பக்தர்களின் பால்குடங்கள், அங்கு வீற்றிருக்கும் கந்தப் பெருமானுக்கு விசேட அபி'ேகம் செய்வதற்காகக் கையளிக்கப்பட்டன. தைப்பூச நன்னாளில் அன்னை துர்க்கையின் சந்நிதியில் இருந்து முருகப் பெருமானின் சந்நிதிக்கு இவ்வாறானதொரு பால்குடப் பவனி இடம்பெற்றமை அடியார்கள் மத்தியில் மிகுந்த ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்தியது. அன்னை துர்க்கையினதும் முருகப் பெருமானினதும் திருவருளைப் பெற்றுக்கொள்வதற்காக பக்திப் பெருக்குடன் அடியார்கள் இந்தப் பால்குடப் பவனியில் அணிதிரண்டமை குறிப்பிடத்தக்கது.







# இணுவில் கந்தசுவாமி கோவிலில் கொட்டும் மழையிலும் 1008 பால்குடங்கள் ஏந்திப் பக்தர்கள் நேர்த்திக்கடன்!



வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் இணுவையம்பதி கந்தசுவாமி கோவில் தைப்பூசத் திருவிழாவினை முன்னிட்டு, 1008 பால்குடப் பவனி நேற்று மிகவும் பக்திப் பெருக்குடன் நடைபெற்றது. தைப்பூச நன்னாளில் முருகப் பெருமானுக்குப் பாலாபிஷேகம் செய்து வழிபடுவதற்காகப் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ஆலயத்தில் திரண்டிருந்தனர். இம்முறை மங்களகரமான 1008 பால்குடங்கள் ஏந்தியவாறு பக்தர்கள் அணிவகுத்து வந்த காட்சி சிந்தை கவரும் வகையில் அமைந்தது. காலையிலிருந்தே வானம் மேகமூட்டமாகக் காணப்பட்ட நிலையில், பால்குடப் பவனி ஆரம்பமான சமயம் கொட்டும் மழை பெய்யத் தொடங்கியது. எனினும், பெய்த மழையையும் பொருட்படுத்தாது, “அரோகரா“ கோஷம் முழங்கப் பக்தர்கள் மழையில் நனைந்தபடியே தமது சிரசிலும் கரங்களிலும் பால்குடங்களை ஏந்தி மிகவும் நிதானமாகவும் பக்தியுடனும் வீதி உலா வந்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினார்கள்.



கந்தனின் திருவருளைப் பெறுவதற்காகச் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை மழையில் நனைந்தபடி நீண்ட வரிசையில் காத்திருந்து பால்குடங்களைச் சமர்ப்பித்தமை அங்கிருந்த அனைவரையும் வியப்பிலும் பக்தியிலும் ஆழ்த்தியது. இவ்வாறு பக்தர்களால் கொண்டுவரப்பட்ட பாலில், முருகப் பெருமானுக்கும் வள்ளி தெய்வானை சமேத மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகங்கள் நடைபெற்று அலங்கார தீப ஆராதனைகள் காண்பிக்கப்பட்டன. இயற்கைச் சீற்றங்களையும் கடந்து இறை பக்தியே மேலானது என்பதை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்த இந்தப் பால்குடப் பவனி, இணுவில் திருத்தலத்தில் பெரும் ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்தியது



# கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் நவதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் வருண பகவான் ஆசியுடன் பக்திபூர்வமாக நிறைவேறியது





கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் இடது கரையில் அருளாட்சி புரியும் அன்னை கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் நவதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம், தைப்பூச நன்னாளான 01.02.2026 பக்திப் பெருக்குடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஈழத்துச் சித்தரான தவத்திரு யோகர் சுவாமிகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றிய காலத்தில், இப்பகுதியில் அம்பாளுக்கு ஒரு ஆலயம் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்க்கதரிசனமான கருத்தை முன்வைத்திருந்தார். அதற்கிணங்க, ஆலயத்தின் மூலஸ்தானத்திற்கான நிலத்தைத் தெரிவு செய்தபோது நிகழ்ந்த ஒரு அற்புதச் சம்பவம் இன்றும் அடியார்களால் சிலிர்ப்புடன் நினைவுகூரப்படுகிறது. மூலஸ்தான நிலத்தைத் தேடி வந்தபோது, வானில் தோன்றிய கருடன் ஒன்று அவர்களுடன் தொடர்ந்து வந்து, தற்போது அன்னை வீற்றிருக்கும் இடத்தை வட்டமிட்டு அடையாளப்படுத்தியதாகவும், அதன் பின்னரே அவ்விடம் தீர்மானிக்கப்பட்டதாகவும் இச்சம்பவத்தை நேரில் கண்ட முதியவர் ஒருவர் நெகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றார்.

இந்த அன்னைக்கு “கனகாம்பிகை“ என்ற திருநாமத்தைச் சூட்டியதுடன், அப்பகுதிக்கு “கனகபுரம்“ என்ற பெயரைத் தீர்மானித்தவரும் யோகர் சுவாமிகளே ஆவார்.

நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது, வருண பகவான் மழைப்பூக்களைத் தூவி ஆசீர்வதிக்க, நவதள இராஜகோபுரத்தின் மீதும் மூலஸ்தானத்தின் மீதும் புனித நீர் ஊற்றப்பட்டுத் திருக்குடமுழுக்கு இனிதே நிறைவேறியது. இரணைமடுக் குளத்தை அண்டிய பகுதியில் அமைந்துள்ள இந்த ஆலயம், விவசாயத்தைப் பிரதானமாகக் கொண்ட இப்பகுதிக்குத் தேவையான மழை வீழ்ச்சியைத் தடையின்றி வழங்கவும், அதேவேளை எவ்வித இயற்கைச் சீற்றங்களும் ஏற்படாத வகையில் நிலத்தைப் பாதுகாத்து, விவசாயச் செழிப்பின் மூலம் மக்கள் தன்னிறைவு பெற அருள்பாலிக்க வேண்டும் என்பதே அனைவரதும் பிரார்த்தனையாக அமைந்தது. பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கலந்துகொண்ட இந்த ஆன்மீகப் பெருவிழா, கிளிநொச்சி மண்ணில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.








# கந்தபுராணம் அரங்கேறிய குமரக்கோட்டம்




தமிழகத்தின் ஆன்மிகத் தலம் திகழும் காஞ்சிபுரம், முக்தி தரும் தலங்களில் முதன்மையானது. "நகரேஷு காஞ்சி" என்று போற்றப்படும் இந்நகரம், சைவமும் வைணவமும் தழைத்தோங்கிய புண்ணிய பூமியாகும். காஞ்சிபுரத்தின் மிக முக்கிய அம்சமாகத் திகழ்வது "சோமாஸ்கந்த" அமைப்பாகும். அதாவது, காமாட்சி அம்மன் கோயிலும், ஏகாம்பரநாதர் கோயிலும் தந்தை-தாய் வடிவில் அமைய, இவ்விரு கோயில்களுக்கும் இடையே முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள அமைப்பு "குமரக்கோட்டம்" என்று அழைக்கப்படுகிறது. இந்த வடிவம் சிவபெருமானும் பார்வதியும் தங்கள் மைந்தன் முருகனுடன் வீற்றிருக்கும் சோமாஸ்கந்த கோலத்தை நினைவூட்டுகிறது. இந்த குமரக்கோட்டத்திலேயே முருகப்பெருமானின் வரலாற்றைக் கூறும் உன்னத காவியமான கந்தபுராணம் அரங்கேற்றப்பட்டது என்பது இதன் வரலாற்றுச் சிறப்பு.



குமரக்கோட்டம் முருகப்பெருமான், பிரம்மாவைப் சிறையில் அடைத்துவிட்டு, தானே படைப்புத் தொழிலை மேற்கொண்ட "பிரம்ம சாஸ்தா" கோலத்தில் காட்சி தருகிறார். இத்தலத்து முருகனை வழிபட்டால் கல்வியிலும், ஞானத்திலும் சிறந்து விளங்கலாம் என்பது பக்தர்களின் நம்பிக்கை. இத்தகைய பெருமை மிக்க தலத்தில் தான், சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு கச்சியப்ப சிவாச்சாரியார் வாழ்ந்து வந்தார். அவர் குமரக்கோட்டம் கோயிலில் அர்ச்சகராகத் தொண்டு செய்து வந்தவர். முருகப்பெருமான் மீது அளவற்ற பக்தி கொண்ட அவர், கந்தனின் வரலாற்றை முழுமையாகப் பாட விரும்பினார். சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து உருவான ஆறு சுடர்கள் முருகனாக அவதரித்ததையும், சூரபத்மனை அழித்து தேவர்களைக் காத்த வீரத்தையும் உலகம் அறியச் செய்ய அவர் விழைந்தார்.

கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தை எழுதத் தொடங்கியபோது, முருகப்பெருமானே அவருக்குத் துணை நின்றதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு நாளும் அவர் எழுதி முடித்த ஓலைச்சுவடிகளை முருகனின் திருவடிகளில் வைத்துவிட்டுச் செல்வார். மறுநாள் காலையில் வந்து பார்க்கும்போது, அதில் சில திருத்தங்களை முருகப்பெருமானே செய்திருப்பாராம். குறிப்பாக, கந்தபுராணத்தின் முதல் பாடலான "திகடசக்கரச் செம்முகம்" என்று தொடங்கும் பாடலின் முதல் அடியை முருகப்பெருமானே எடுத்துக் கொடுத்ததாக வரலாறு கூறுகிறது. இவ்வாறு தெய்வீகப் பின்னணியுடன் உருவான கந்தபுராணம், முருகனின் புகழைப் பாடும் கலைக்களஞ்சியமாகத் திகழ்கிறது.

கச்சியப்பர் தான் இயற்றிய கந்தபுராணத்தை குமரக்கோட்டம் ஆலயத்தில் அரங்கேற்ற முடிவு செய்தார். இதற்காகத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெரும் புலவர்களும், அறிஞர்களும் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்தனர். கந்தபுராணம் அரங்கேறிய மண்டபம் இன்றும் குமரக்கோட்டத்தில் “கச்சியப்பர்



மண்டபம்“ என்று போற்றப்படுகிறது. அரங்கேற்றத்தின் போது, கந்தபுராணத்தின் முதல் பாடலில் இடம்பெற்ற “திகடசக்கரம்“ என்ற சொல்லுக்குச் சில அறிஞர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர். இலக்கண விதிகளின்படி இந்தச் சொல் அமையவில்லை என்று அவர்கள் வாதிட்டனர். இதனால் அரங்கேற்றம் தற்காலிகமாக நின்றது.

கச்சியப்பர் மிகுந்த கவலையுடன் முருகப்பெருமானிடம் முறையிட்டார். அன்றிரவு முருகப்பெருமான் ஒரு புலவர் வடிவில் வந்து, அந்தச் சொல்லுக்கான இலக்கண விளக்கத்தை அளித்து, அதற்குச் சான்றாக வீரசோழியம் என்ற இலக்கண நூலைக் காட்டினார். மறுநாள் சபையில் அந்த விளக்கம் அளிக்கப்பட்டபோது, அறிஞர்கள் அனைவரும் கச்சியப்பரின் புலமையையும், முருகனின் திருவருளையும் எண்ணி வியந்து பாராட்டினர். தடை நீங்கி கந்தபுராணம் வெற்றிகரமாக அரங்கேறியது. இந்த நிகழ்வு நிகழ்ந்த இடம் என்பதால் குமரக்கோட்டம் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், ஆன்மிக வரலாற்றிலும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது.

கந்தபுராணம் என்பது வெறும் கதை மாத்திரமல்ல் அது வாழ்வியலின் தத்துவங்களை உணர்த்தும் ஒரு வழிகாட்டியாகும். அதர்மம் அழியும், தர்மம் வெல்லும் என்பதையும், ஆணவம் (சூரபத்மன்) இறைவனின் கருணையால் ஆட்கொள்ளப்படும் என்பதையும் இது அழகாக விளக்குகிறது. கந்தபுராணத்தை வாசிப்பதும், கேட்பதும் ஒரு சிறந்த தவமாகவே கருதப்படுகிறது. கச்சியப்ப சிவாச்சாரியார் வழங்கிய இந்த அமுதமொழிப் புதையல், குமரக்கோட்டம் என்ற கருப்பையிலிருந்து உருவானது என்பது காஞ்சிபுரத்திற்குப் பெருமை சேர்க்கிறது.

குமரக்கோட்டம் கோயில் அமைப்பு மிகவும் பழமையானது மற்றும் கலைநயம் மிக்கது. இங்குள்ள சிற்பங்களும், தூண்களும் பல்லவர் மற்றும் சோழர் காலத்துக் கட்டடக்கலைக்குச் சான்றாக விளங்குகின்றன. கருவறையில் முருகப்பெருமான் பத்மாசனத்தில் அமர்ந்து, கையில் அக்கமாலையும், கமண்டலமும் ஏந்தி, ஞானாசிரியராக வீற்றிருக்கிறார். உற்சவ மூர்த்தியாக சுப்பிரமணியர் தன் தேவியர்களான வள்ளி மற்றும் தெய்வானையுடன் எழிலாகக் காட்சி தருகிறார். இத்தலத்தில் கந்தசஷ்டி திருவிழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. சூரசம்ஹார வைபவத்தைக் காணப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இக்கோயிலில் திரளுவர்.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் வழிபடும் சிவபெருமான், மண்ணால் ஆன லிங்க வடிவில் (பிருத்வி தலம்) காட்சி தருகிறார். அதேபோல் காமாட்சி அம்மன் காமாட்சி பீடமாக அருள்பாலிக்கிறார். இவ்விருவருக்கும் நடுவில் குமரக்கோட்டத்தில் முருகன் அமர்ந்திருப்பது, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் ஒருங்கே அமைந்த ஞான பூமியாகக் கருதப்படுகிறது. கந்தபுராணம் அரங்கேறிய தலம் என்பதால்,

இங்குள்ள ஒவ்வொரு கல்லும் கச்சியப்பரின் தமிழையும், முருகனின் அருளையும் பறைசாற்றுகிறது.

கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தை எழுதி முடித்த பிறகு, அதன் பெருமை எங்கும் பரவியது. கந்தபுராணத்தின் ஒவ்வொரு செய்யுளும் பக்தியைத் தூண்டும் விதமாக அமைந்தது. முருகனின் அறுபடை வீடுகள், சூரபத்மனின் வதை, தெய்வானை மற்றும் வள்ளியின் திருமணங்கள் எனப் புராணச் செய்திகளை மிக நேர்த்தியாகவும், உணர்ச்சிப் பூர்வமாகவும் கச்சியப்பர் வடித்திருந்தார். இன்றும் குமரக்கோட்டம் செல்லும் பக்தர்கள், கச்சியப்பருக்கு முருகப்பெருமான் காட்சி கொடுத்த இடத்தையும், அவர் கந்தபுராணத்தை அரங்கேற்றிய மண்டபத்தையும் கண்டு பரவசமடைகின்றனர்.

முடிவாக, குமரக்கோட்டம் என்பது ஒரு வழிபாட்டுத் தலம் மட்டுமல்ல, அது தமிழ் மொழியின் வளத்திற்குப் பங்களித்த ஒரு கலைக்கூடமும் ஆகும். கந்தபுராணம் என்னும் மகா காவியத்தைத் தமிழுக்குத் தந்த கச்சியப்ப சிவாச்சாரியார் வாழ்ந்த அந்தப் புனித மண்ணை மிதிப்பது பெரும் பேறாகக் கருதப்படுகிறது. கந்தபுராணத்தின் ஒவ்வொரு சொல்லிலும் முருகனின் திருவருள் உறைந்திருக்கிறது. காஞ்சிபுரத்தின் வைபவங்களில் குமரக்கோட்டத்தின் பங்கு ஈடுஇணையற்றது. இத்தலத்திற்குச் சென்று கந்தனைத் தரிசிப்பவர்களுக்கு மன அமைதியும், தடைகளற்ற வாழ்வும் அமையும் என்பது திண்ணம். கந்தபுராணம் அரங்கேறிய அந்தப் புனித நிகழ்வை நினைவுகூர்வது, நமது கலாச்சார மற்றும் ஆன்மிக அடையாளத்தைப் போற்றுவதற்குச் சமமாகும். முருகப் பெருமானின் அருளும், கச்சியப்பரின் தமிழும் குமரக்கோட்டத்தில் இன்றும் நித்ய வாசம் செய்கின்றன.

# இலங்கையில் திருமுறை வகுப்புத் தொடக்க விழாவை தருமபுர ஆதீன குரு மகா சந்நிதானம் தொடக்கி வைத்தார்



இலங்கைச் சிறுவர்களிடையே திருமுறை அறிவை வளர்க்கும் நோக்கில், அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் தருமபுர ஆதீன திருமுறை ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து நடத்தும் மாபெரும் திருமுறை வகுப்புத் தொடக்க விழா 06.02.2025 (வெள்ளிக்கிழமை) கொழும்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு அருளாசி வழங்குவதற்காகக் கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்தின் 27-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வருகை தந்திருந்தார். அவருக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் நிறுவனருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் மாலை அணிவித்துச் சிறப்பான வரவேற்பு அளித்தார்.

இலங்கையின் 18 மாவட்டங்களில், 141 மையங்களின் ஊடாக ஆயிரக்கணக்கான மாணவர்களை உள்வாங்கி இந்தத் திருமுறை வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. தருமபுர ஆதீன திருமுறை ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், திருமதி கௌரி அம்மையார் இந்தப் பாரிய திட்டத்தின் பொறுப்பாளராகச் செயல்பட்டு, மிகக்குறுகிய காலத்தில் இச்சாதனையைச் சாத்தியப்படுத்தியுள்ளார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திருமதி அபிராமி கைலாசம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இந்து





சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. அநிருத்ரன் மற்றும் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருமுறை ஓதுவதன் அவசியம், தருமபுர ஆதீனத்தின் தொலைநோக்கான சிந்தனைகள், மற்றும் இளைய தலைமுறைக்குச் சைவ சமய விழுமியங்களைக் கொண்டு சேர்ப்பதன் முக்கியத்துவம் குறித்து அவர்கள் உரையாற்றினர்.

இலங்கை முழுவதிலும் உள்ள ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஒரே நேரத்தில் இந்த அறநெறிப் பயணத்தில் இணைந்திருப்பது, ஈழத்துச் சைவ வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை தருமபுர ஆதீனத்தை சார்ந்தவர்களும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினரும் இணைந்து மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.



